அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 07/93

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு.07
1993 ஏப்ரல் மாதம் 26 ஆந் திகதி.

எல்லாச் செயலாளர்கட்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மத்திய வங்கி ஆளுநருக்கும்.

மாகாண சபைகள் தேர்தல்கள்-1993
நடாத்துவதற்கான ஆட்கள்

---

எதிர்வரும் மாகாண சபைகள் தேர்தல்களை நடாத்துவதற்கு முழு அரசாங்க
சேவையினதும் மக்கள் வங்கிச் சேவையினதும் சேவைகளை தேர்தல் ஆணையாளரும்,
தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களும் பெற்றுக் கொள்ளச் செய்வது இன்றியமையாத
தேர்தல் கடமைக்காக ஆரம்பத்தில் அடையாளம் காணப்பட்ட அலுவலர்கள் தவிரப்
பிற அலுவலர்களும் அவர்களுடைய சேவை தேவைப்படும்போது ஈடுபடுத்தக் கூடியாத
காத்திருக்க வேண்டும்.

02. அதனால், உங்களின் கீழ்ச் சேவையாற்றும் அலுவலர்கள் சம்பந்தமாகப் பின்வ
முறையில் நீங்கள் செயற்படுவது அவசியம்:-

(அ) மாகாண சேவைகள் உட்பட அரசாங்க சேவையிலும் மத்திய வங்கியிலு
முள்ள எந்தவொரு அலுவலர்க்கும் 09.05.1993 முதல் 18.05.19
வரையுள்ள காலப்பகுதியின் போது எவ்வித லீவும் கொடுபடக் கூடாது.
இக்காலத்திற்காக ஏற்கனவே வழங்கப்பட்ட தனிப்பட்ட லீவு எதுவும்
இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும். ஆயினும், சுகவீனம்
போன்ற மிகவும் புறநடையான சூழ்நிலைகளில் தேர்தல்கள் ஆணையாள
டன் கலந்தாலோசித்து ஓர் அமைச்சின் செயலாளரொருவரோ மத்திய
வங்கி ஆளுநரோ லீவு கொடுபடுவதைத் தீர்மானிக்கலாம்.

(ஆ) மூன்று மாதங்கட்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்குப் படிப்பு
லீவில் செல்வோரைத் தவிர, மேற்குறிப்பிட்ட காலத்தில் உத்தியோகம்
அல்லது தனிப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுப் பிரயாணம் செய்
அனுமதி வழங்கப்படலாகாது. இவ்வரையறைக்கு முரணாக ஏற்கனவே வழ
கப்பட்ட எவ்வித அனுமதியும் இரத்துச் செய்யப்பட்டதாகக் கொள்ளப்
பிரயாணம் செய்வது மிகவும் தவிர்க்க முடியாததும் இன்றியமையாததும்
பின்போட முடியாத காரணங்களுக்காகவென அமைச்சின் செயலாளர் ஒ
கருதுவாராயின், அத்தகைய நிலைமையின் முழுச் சூழ்நிலையும் சனாதிபதி
செயலாளருக்கு அறிக்கையிடப்பட வேண்டும்.

(இ) அமைச்சுக்கள், மாகாண சபைகள் அழைத்தும் வருகை தரும் வெளிநாட்டு
தூதரகங்களுடனான பேச்சுவார்த்தைகள், கருத்தரங்குகள், மாநாடுகள்
அத்துடன் பயிற்சித் திட்டங்கள் யாவும் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியின்
போது தேர்தல் கடமையில் எந்தவோர் அலுவலரையும் ஈடுபடுத்துவதற்
தடையாக அமையாவாறு அட்டவணைப்படுத்துவதனை அல்லது மீளட்டவணை
படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஒப்பம்: எம்.என். ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.